முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1429

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.08.2023,** திங்கட்கிழமை

1. ஞான சக்திமிகு அரங்கா வாழ்க
ஞானிகள் சக்திகொண்ட தேசிகா வாழ்க
வானவர்கள் மெச்சுகின்ற வள்ளலே வாழ்க
வரம் தந்து மக்களை காக்கும் ஞானியே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 11 ம் நாள், 28.08.2023 திங்கட்கிழமை)
ஊழ்போக்கி உலகோர்க்கு நல்வழி
உயர்வாகக்காட்டி மக்களை எல்லாம் ஞானிகளாக
3. மாற்றம் நடத்த மாதவம் புரிந்த அரங்கனே
மகானே உந்தன் மாதர்மமும் சிறப்பு மக்களை நீ காக்கும் விதமும் சிறப்பு
ஆக்கமுடன் ஆறுமுகன் யான் உன்னோடு இருந்து அற்புதம் நடத்த
அகிலத்தார் உன் குடில் நோக்கி தொடர்ந்து வந்து
4. வந்துமே அரங்கன் தான் உலகின் அவதார ஞானி என
ஆற்றல்பட நம்பகம் கொண்டு
வரம் கேட்டு உன்பால் தீட்சை
வையகத்தார் பெற்று தொடர்ந்து வர
5. வருகவே உலக மாற்றம் நிகழும்
வருவோரெல்லாம் ஞானிகளாக ஆற்றல்பெருகி
தருகின்ற குணம் கூடி
தரணியில் தர்மத்தை வளர்த்து
6. ஈடு இணையில்லாத ஞான ஆட்சிக்காலமாக
இந்த உலகமே பாதுகாப்புப் பொருந்த
அற்புதமான மாற்றம் நிகழக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–